# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR

**O.S. No.108/2004**

Deposition of **D.W.2** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. Kokilavani, Junior Assistant of this court, on 25.03.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : சாமிநாதன் Father's Name :

துவக்க நேரம் : 04.50 P.M.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. இன்று நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை அனுப்பட்டதா என்றால் இல்லை. பிரதிவாதி எனக்கு உறவினரா என்றால் இல்லை, ஒரே ஊரைச் சேர்ந்தவர். என்னை சாட்சியம் அளிக்க பிரதிவாதிதான் அழைத்து வந்தார் என்றால் சரிதான். எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் பிரதிவாதி கூறியதன்பேரில்தான் எனக்கு தெரியும் என்றால் பிரதிவாதியும், எனது தகப்பனார் ஆறுமுகமும் கூறியுள்ளனர். எனது தகப்பனார் உண்மையான ஆவணத்தில்தான் கையொப்பமிடுவார் என்றால் சரிதான்.

2. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் கடந்த 15.09.1999 தேதியிட்ட குதவைப்பத்திரத்தில் உள்ள கையொப்பம் எனது தகப்பனாரின் கையொப்பம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பமிடவில்லை என்றால் சரிதான். 13.09.2002 தேதியிட்ட கிரய ஒப்பந்த ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பமிடவில்லை என்றால் சரிதான். மேற்படி இரு ஆவணங்கள் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், என் தந்தையும், பிரதிவாதியும் கூறியுள்ளார்கள்.

3. மேற்படி இரு ஆவணங்களும் போலியான ஆவணங்கள் என்று எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ள நிலையில் எனது தந்தையோ, பிரதிவாதியோ அதுகுறித்து காவல்நிலையத்தில் புகார் கொடுத்து நடவடிக்கை எதுவும் மேற்கொண்டார்களா என்றால் இல்லை, ஆனால் பிரதிவாதி புகார் கொடுத்த பொழுது காவல் நிலையத்தில் நீதிமன்றத்தின் மூலம் பார்த்துக்கொள்ளுங்கள் என்று கூறிவிட்டனர். மேற்படி புகார் எந்த தேதியில், எந்த காவல்நிலையத்தில் வழங்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வது போல் பிரதிவாதி எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றாலும், நான் தற்பொழுது வழக்கிற்காக அவ்வாறு சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் போலியானது என்பதற்காக நான் ஏதேனும் புகார் கொடுத்து நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. பிரதிவாதி எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 05.01 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/-D.JansiRani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.108/2004, Dt.25.03.2026.